CC.No.48/2026 dt:30.03.2026
on the file of DM cum JM Court, Ntm.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாச வருடம், பங்குனி திங்கள் 16 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.48/2026**

CNR No.TNDG100002782026

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.49/2025

எதிரியின் பெயர் – மதியழகன் 27/2025 த/பெ.சுப்பையா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | மதியழகன் 27/2025 த/பெ.சுப்பையா, 406, காமராஜர் நகர், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 31.01.2025 | 31.01.2025 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 31.01.2025 | 11.03.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure | : | 13.03.2026 ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 296(b) 127(2) BNS ன் கீழும் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.30 06:56:34 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1973, as the case may be; | | | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No.184/2026 Dt.13.03.2026 u/s.359(2) of BNSS Petition Dismissed. Crl.M.P.No.219/2026 Dt.23.03.2026 u/s.348 of BNSS Petition filed and allowed | | |
| | | | Nil | | |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1 | திரு.இப்ராம்ஷா | 13.03.2026 | 13.03.2026 |
| | | PW2 | திரு.தில்சாத்பேசம் | 13.03.2026 | 13.03.2026 |
| | | PW3 | திரு.ஜன்னத் | 13.03.2026 | 13.03.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 30.03.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | வாதி இப்ராம்ஷா கடந்த 05.12.2023 ம் தேதி நத்தத்தில் இயங்கி வரும் Five Star Business Finance Limited என்ற நிறுவனத்தில் பணம் ரூ.3,50,000/–த்திற்கு HOME LOAN பெற்று அதற்கு 84 – மாதம் தவணைகளாக எடுத்து 13– மாதங்கள் எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் தவணை பணம் செலுத்தி வந்த நிலையில் 14 வது மாதம் தவணை பணம் செலுத்த சிறிது காலதாமதம் ஏற்பட்டதால் கடந்த 29.01.2025 ம் தேதி 15.00 மணிக்கு வாதி இப்ராம்ஷாயும் அவரது மகன் பாபு என்பவரும் வீட்டில் இல்லாத நேரத்தில் மேற்படி நிறுவனத்தில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வரும் எதிரி வாதி இப்ராம்ஷாயின் வீட்டிற்கு சென்று வீட்டிலிருந்த வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்திடமும் மகள் ஜன்னத்திடமும் அந்த தேவிடியா மகன் எங்கு போனான் பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று அசிங்கமாக பேசிக்கொண்டே நோட்டீஸ் ஒட்டிவிட்டு வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்தையும், மகள் ஜன்னத்தையும் வீட்டிற்குள் வைத்தே வீட்டை வெளியே பூட்டிவிட்டு சென்றதாக எதிரி மீது பிரிவுகள் 296(b) 127(2) BNS ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளி இல்லை |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:56:39 +0530

| | | |
|---|---|---|
| தண்டனை (அ) உத்தரவு | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 296(b) 127(2) BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரியை 278(1) of BNSS Act ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| | | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 11.03.2026 ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 25.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.V.சதாசிவம் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –</u>**

வாதி இப்ராம்ஷா கடந்த 05.12.2023 ம் தேதி நத்தத்தில் இயங்கி வரும் Five Star Business Finance Limited என்ற நிறுவனத்தில் பணம் ரூ.3,50,000/–

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:56:45 +0530

த்திற்கு HOME LOAN பெற்று அதற்கு 84 – மாதம் தவணைகளாக எடுத்து 13– மாதங்கள் எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் தவணை பணம் செலுத்தி வந்த நிலையில் 14 வது மாதம் தவணை பணம் செலுத்த சிறிது காலதாமதம் ஏற்பட்டதால் கடந்த 29.01.2025ம் தேதி 15.00 மணிக்கு வாதி இப்ராம்ஷாயும் அவரது மகன் பாபு என்பவரும் வீட்டில் இல்லாத நேரத்தில் மேற்படி நிறுவனத்தில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வரும் எதிரி வாதி இப்ராம்ஷாயின் வீட்டிற்கு சென்று வீட்டிலிருந்த வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்திடமும் மகள் ஜன்னத்திடமும் அந்த தேவிடியா மகன் எங்கு போனான் பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று அசிங்கமாக பேசிக்கொண்டே நோட்டீஸ் ஒட்டிவிட்டு வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்தையும், மகள் ஜன்னத்தையும் வீட்டிற்குள் வைத்தே வீட்டை வெளியே பூட்டிவிட்டு சென்றதாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 11.03.2026ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரீசிலனை செய்து பார்த்த போது குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:56:50 +0530

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததினால், 12.03.2026 ம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b) 127(2) BNS ன் கீழ் குற்றம் குறித்து BNSS, 2023 பிரிவு 274-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை எனறும், வழக்கை மேல் நடத்துவதாகவும் கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

வாதி இப்ராம்ஷா கடந்த 05.12.2023 ம் தேதி நத்தத்தில் இயங்கி வரும் Five Star Business Finance Limited என்ற நிறுவனத்தில் பணம் ரூ.3,50,000/-த்திற்கு HOME LOAN பெற்று அதற்கு 84 – மாதம் தவணைகளாக எடுத்து 13- மாதங்கள் எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் தவணை பணம் செலுத்தி வந்த நிலையில் 14 வது மாதம் தவணை பணம் செலுத்த சிறிது காலதாமதம் ஏற்பட்டதால் கடந்த 29.01.2025 ம் தேதி 15.00 மணிக்கு வாதி இப்ராம்ஷாயும் அவரது மகன் பாபு என்பவரும் வீட்டில் இல்லாத நேரத்தில் மேற்படி நிறுவனத்தில் பணம்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.30 06:56:56 +0530

வசூல் செய்யும் வேலை செய்து வரும் எதிரி வாதி இப்ராம்ஷாயின் வீட்டிற்கு சென்று வீட்டிலிருந்த வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்திடமும் மகள் ஜன்னத்திடமும் அந்த தேவிடியா மகன் எங்கு போனான் பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று அசிங்கமாக பேசிக்கொண்டே நோட்டீஸ் ஒட்டிவிட்டு வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்தையும், மகள் ஜன்னத்தையும் வீட்டிற்குள் வைத்தே வீட்டை வெளியே பூட்டிவிட்டு சென்றதாக அ.சா.1 இப்ராம்ஷா, பட்டியல் சாட்சி 7 சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும், புகார் மனுவிற்கு மனு ரசீது எண். 117/2025 பதிவு செய்து விசாரணைக்கு பின்பு அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல்நிலைய குற்ற எண். 49/2025 சட்டபிரிவுகள் 296(பி), 127(2), 49 BNS ஆக வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

**8.** 31.01.2025ம் தேதி காலை 11.45 மணிக்கு சம்பவ இடமான நத்தம் முஸ்லிம் மஸ்தான் தெருவிலுள்ள வாதியின் வீட்டில் வைத்து சாட்சிகள் பட்டியல் சாட்சி 5 ஷாஜகான் மற்றும் பட்டியல் சாட்சி 6 மதினா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.4 மாதிரி வரைபடம் வரைந்து அ.த.சா.ஆ.5 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் இப்ராம்ஷா, தில்ஷாத்பேகம், ஜன்னத், பாபு, ஷாஜகான் மற்றும் மதினா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரியான மதியழகன் என்பவரை 06.02.2025ம் தேதி 12.30 மணிக்கு நிலையத்தில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:01 +0530

ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் வழக்கு விசாரணையில் ஜெயச்சந்திரன் என்பவர் பைவ் ஸ்டார் பைனான்ஸ் நிறுவனத்தில் சம்பவ தினத்தன்று வேலைக்கு விடுப்பு எடுத்துள்ளார் என்பது தெரியவந்ததால் அவரை வழக்கிலிருந்து நீக்கம் செய்து அ.த.சா.ஆ.6 எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்துள்ளார். இவ்வழக்கின் சட்டப்பிரிவான 49 BNS வரவில்லை என்பது தெரியவந்ததால் மேற்படி சட்டப்பிரிவை நீக்கம் செய்து 296(b), 127(2) BNS அ.த.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 06.02.2025ம் தேதி 296(பி), 127(2) BNS –ன் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் படி 30.03.2026–ம் தேதி கேள்விகள் கேட்டபோது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:07 +0530

11. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்றும் வாதிட்டார். மேலும், அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரியை விடுதலை செய்யுமாறு வேண்டினார்.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

12. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

**தீர்வு**

13.1. வாதி இப்ராம்ஷா கடந்த 05.12.2023 ம் தேதி நத்தத்தில் இயங்கி வரும் Five Star Business Finance Limited என்ற நிறுவனத்தில் பணம் ரூ.3,50,000/–த்திற்கு HOME LOAN பெற்று அதற்கு 84 – மாதம் தவணைகளாக எடுத்து 13– மாதங்கள் எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் தவணை பணம் செலுத்தி வந்த நிலையில் 14 வது மாதம் தவணை பணம் செலுத்த சிறிது காலதாமதம் ஏற்பட்டதால் கடந்த 29.01.2025 ம் தேதி 15.00 மணிக்கு வாதி இப்ராம்ஷாயும் அவரது மகன் பாபு என்பவரும் வீட்டில் இல்லாத நேரத்தில் மேற்படி நிறுவனத்தில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வரும் எதிரி வாதி இப்ராம்ஷாயின்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.30 06:57:11 +0530

வீட்டிற்கு சென்று வீட்டிலிருந்த வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்திடமும் மகள் ஜன்னத்திடமும் அந்த தேவிடியா மகன் எங்கு போனான் பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று அசிங்கமாக பேசிக்கொண்டே நோட்டீஸ் ஒட்டிவிட்டு வாதி இப்ராம்ஷாயின் மனைவி தில்ஷாத்பேகத்தையும், மகள் ஜன்னத்தையும் வீட்டிற்குள் வைத்தே வீட்டை வெளியே பூட்டிவிட்டு சென்றதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது.

13.2. அந்த வகையில், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 இப்ராம்ஷா (புகார்தாரர்) அவர்கள் அளித்துள்ள சாட்சியத்தை பரிசீலனை செய்த வகையில், ஆஜர் எதிரி மதியழகன் என்பவரை தெரியும். நான் தனியார் பைப் ஸ்டார் நிதி நிறுவனத்தில் ரூ.3,50,000 கடனாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக வாங்கியிருந்தேன். 84 தவணைகளில் திருப்பி செலுத்துவதாக கடன் வாங்கி 13 தவணைகள் செலுத்திய நிலையில் 14 வது தவணை தொகை கட்டுவதற்கு நான் எதிரியிடம் 2 ஆண்டுகள் தவணை கேட்டிருந்தேன். அதற்குள் 14 வது தவணை தொகையை வசூல் செய்வதற்காக ஆஜர் எதிரி பகல் 3.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது நான் சைக்கிள் கடையில் இருந்தேன். என் வீட்டில் என் மனைவி தில்சாத் பேகமும், என் மகள் ஜன்னத்தும் இருந்தபோது, எதிரி எங்கள் வீட்டிற்கு சென்று என் மனைவி மற்றும் மகளிடம் தவணை தொகை கேட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், பிறகு நான் வந்து பார்த்தபோது கதவு வெளியே பூட்டப்பட்டிருந்ததால் கதவை திறந்து என் மனைவி மற்றும் மகளிடம் கேட்டதற்கு ஆஜர் எதிரி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:19 +0530

வந்துவிட்டு சென்றதாக சொன்னார்கள். எதிரி கதவை பூட்டி சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், எதிரி மீது காவல் நிலையத்தில் அ.த.சா.ஆ.1 புகார் கொடுத்தேன். நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் அ.த.சா.ஆ.2 சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளதன் மூலம் அரசு தரப்பு வழக்கு சந்தேகிக்கும் வகையில் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி சாட்சியத்தின் மூலம் எதிரி அ.சா.1 உடன் சமாதானமாக சென்றுள்ளது தெரியவருகிறது.

13.3. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தில்சாத் பேகம் தனது சாட்சியத்தில் "அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை சுமார் 4.00 மணியளவில் நானும், என் மகள் ஜன்னத் என்பவரும் வீட்டிலிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி தவணை தொகை கேட்டு வீட்டிற்கு வந்திருந்தார். நாங்கள் 2, 3 நாட்கள் தவணை கேட்டிருந்தோம். பிறகு 2 நாட்கள் கழித்து நானும், என் மகளும் உள்ளே இருந்தபோது வீடு வெளியே பூட்டப்பட்டிருந்தது. எனவே ஆஜர் எதிரி கதவை பூட்டியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் என் கணவர் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார். தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் அ.த.சா.ஆ.2 சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரியுடன்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:23 +0530

சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்.

13.4. சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.3 ஜன்னத் தனது சாட்சியத்தில் "அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரி மதியழகன் என்பவரை தெரியும். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பகல் சுமார் 3.30 மணியளவில் நானும், என் அம்மா அ.சா.2 ம், என் அம்மா வீட்டில் இருந்தபோது, எங்கள் வீட்டின் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது. பின்னர் ஆஜர் எதிரி பூட்டியிருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் என் அப்பா அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். தற்போது எதிரியுடன் நாங்கள் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை" என்று கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்.

13.5. அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிற பட்டியல் சாட்சிகளை நீக்கம் செய்வதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் நத்தம் காவல் நிலைய தலைமைக்காவலர் கணேஷ்பாண்டியன் அவர்கள் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது முதல்விசாரணையில் எதிரி அசிங்கமாக பேசியதாகவோ, அதனால் மற்றவர்கள் முன்னிலையில் தனது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:29 +0530

குடும்பத்திற்கு அவமானம் ஏற்பட்டதாகவோ, எதிரி தான் தவறான முறையில் சட்டத்திற்கு புறம்பாக அ.சா.2 மற்றும் அ.சா.3–யை அடைத்து வைத்திருந்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக, தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் வழக்கை மேல்நடந்த விரும்பவில்லை என கூறி சமாதான மனு அ.த.சா.ஆ.2 குறியீடு செய்து சாட்சியமளித்துள்ள நிலையிலும், மற்ற சாட்சிகளின் சாட்சியங்களும் எதிரியை குற்றத்தோடு தொடர்புபடுத்தும் வகையில் அரசு தரப்பு சாட்சியம் அமையாத நிலையிலும், எதிரி தான் குற்றத்தை புரிந்துள்ளார் என்று அரசு தரப்பில் நிரூபிக்காத நிலையிலும், அரசு தரப்பில் பிற சாட்சிகள் விசாரிக்காத நிலையிலும், அ.சா.2–ன் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரி தான் குற்றம் புரிந்திருப்பார் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கும், இயற்கை நீதிக்கும் உகந்ததல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 296(b), 127(2) BNS ன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 278(1) of BNSS Act ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**15.** <u>பிரிவு **498** BNSS ன் கீழான உத்தரவு:</u>

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.30 06:57:33 +0530

CC.No.48/2026 dt:30.03.2026
on the file of DM cum JM Court, Ntm.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 30.03.2026—ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | 13.03.2026 | திரு.இப்ராம்ஷா (புகார்தாரர்) |
| 2. | அ.சா.2 | 13.03.2026 | திரு.தில்சாத்பேசம் (கண்ணுற்ற சாட்சி) |
| 3. | அ.சா.3 | 13.03.2026 | திரு.ஜன்னத் (கண்ணுற்ற சாட்சி) |
| 4. | அ.சா.4 | 13.03.2026 | திரு.கணேஷ்பாண்டியன் (புலன்விசாரணைஅதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வ. எண் | சான்றாவணங்கள் | தேதி | சான்றாவணங்களின் விபரங்கள் |
|---|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 29.01.2025 | புகார் |
| 2. | அ.த.சா.ஆ.2 / அ.சா.1 | 13.03.2026 | சமாதானமனு |
| 3. | அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 31.01.2025 | முதல்தகவல்அறிக்கை |
| 4. | அ.த.சா.ஆ.4 / அ.சா.4 | 31.01.2025 | மாதிரிவரைபடம் |
| 5. | அ.த.சா.ஆ.5 / அ.சா.4 | 31.01.2025 | பார்வைமகஜர் |
| 6. | அ.த.சா.ஆ.6 / அ.சா.4 | 06.02.2025 | எதிரி நீக்கல் அறிக்கை |
| 7. | அ.த.சா.ஆ.7 / அ.சா.4 | 06.02.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**எதிரி தரப்பில் சாட்சிகள்** : இல்லை

**எதிரி தரப்பில் சான்று பொருள்கள்** : இல்லை

**எகிரி தரப்பில் சான்றாவணம்** : இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

குறிப்பு:

1. இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க வந்த எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3. வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.30 06:57:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.